### தண்ணீர் இருந்தால்தானே விவசாயிகள் விவசாயம் செய்ய முடியும்?

# ஒரு மாத காலத்தில் த.வெ.க. ஆட்சியின் செயல்பாட்டின் சதவீதம் பூஜ்யம்!

## புதுக்கோட்டையில் முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!

புதுக்கோட்டை, ஜூன் 15-

புதுக்கோட்டையில் முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி செய்தியாளர்களை சந்தித்தார் அப்போது அவர் கூறியதாவது:-

தண்ணியே இல்லாமல் விவசாய கடன் தள்ளுபடி என்ற ஒரு மோசடி நாடகத்தை முதலில் அரங்கேற்றினார்கள், அதை எதிர்த்து விவசாயிகள் இன்று போராடிக் கொண்டுள்ளனர். அடுத்த நாடகமாக குறுவை சாகுபடிக்கு 134 கோடி ரூபாய் மதிப்பில் தொகுப்பு திட்டம் என அறிவித்துள்ளனர். அதனைப் பார்க்கும்போது வேடிக்கையாக உள்ளது, விவசாயமே செய்யவில்லை வேளாண்மைக்கு தண்ணீர் கிடைக்கவில்லை, உரத்திற்கு மானியம் தருகிறோம், விதைக்கு மானியம் தருகிறோம் என்று சொல்வது வேடிக்கையாக உள்ளது.

தண்ணீர் இருந்தால் தானே விவசாயிகள் விவசாயம் செய்ய முடியும்.

இப்படி ஏமாற்று நாடகங்களையும் பித்தலாட்ட நாடகங்களையும் நடத்திக் கொண்டுள்ளது தான் ப்ரோ முதலமைச்சரின் அரசாங்கமாக உள்ளது.

சகோ, குட்டீஸ்,நண்பா என்று அழைத்து எல்லோரிடமும் ஓட்டு கேட்ட முதலமைச்சர் இன்று விவசாயிகளைப் பார்த்து நண்பா தெரிந்து கொள் உனக்கு தண்ணீர் இல்லை.

நீ தண்ணீர் இல்லாமே விவசாயம் பண்ண கற்றுக் கொள்,

அதுதான் இந்த ஆட்சியின் சிறப்பு என்று சொல்கிற நிலைமையை இந்த ஆட்சியில் பார்க்கின்றோம்.,

**ஆதவ் அர்ஜூனா நாடகம்!**

ஆதவ் அர்ஜூனா எதை கணித்தார், தி.மு.க.வி லிருந்து அவர் போய் சேர்ந்தது விடுதலை சிறுத்தைகள் கட்சி,அந்தக் கட்சியில் இடமில்லை என்று சொன்னதும் போறதுக்கு இடம் இல்லாமல் அவர் போனது தமிழக வெற்றிக் கழகத்திற்கு,லாட்டரி சீட்டு நடத்தி அதன் மூலமாக இன்று தமிழக மக்களின் வயிற்று எரிச்சலை கொட்டிக்

கொள்ள வேண்டும் என்பதற்காக,லாட்டரி சீட்டால் பல குடும்பங்கள் தற்கொலைக்கு ஆளாகியுள்ளது,தமிழகத்தில் அதனால் லாட்டரி சீட்டுகள் ஒழிக்கப்பட்டது, ஆனால் அந்த லாட்டரியை இன்றைக்கு மறைமுகமாக கொண்டு வந்து கொள்ளையடிக்க வேண்டும் என்ற ஒரே எண்ணத்தில் ஆதவ் அர்ஜூனா நாடகம் ஆடிக் கொண்டுள்ளார்,

அவரது நோக்கமே தமிழகத்தை கொள்ளையடிக்க வேண்டும் என்பதுதான்,

ஒரு லாட்டரி சீட்டை 10 சீட்டாக போடுவது போல் இன்றைக்கு அவர்கள் செய்து கொண்டுள்ளனர்,

யாரை நம்பி நான் பிறந்தேன் போங்கடா போங்க..

என் காலம் வெல்லும் வென்ற பின்னே வாங்கடா வாங்க. என்ற பாடலைப் போல் தி.மு.க. யாரையும் நம்பி இல்லை.

தனித்து நின்று வெற்றி பெறக்கூடிய திராணி தெம்பு திமுகவுக்கு உள்ளது. திமுக தொண்டர்கள் தனித்துப் போட்டியிட வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளனர். இன்னும் ஆறு மாத காலத்திற்குள் ஆட்சி மாற்றம் வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு தமிழக மக்கள் உள்ளனர்,

நாங்கள் ஐந்தாண்டுகள் செய்த சாதனையை மக்கள் எண்ணிப்பார்க்க தவறியதை தற்போது வீட்டில் உட்கார்ந்து நினைத்துப் பார்க்கின்றனர், இனி நினைத்து பார்த்து ஓட்டு போடுவார்கள், அ.தி.மு.க.வின் உண்மையான திரை தி.மு.க. தான் என எடப்பாடி பழனிச்சாமி பேசிய தொடர்பான கேள்விக்கு, எடப்பாடி பழனிச்சாமி எதை வேண்டுமானாலும் பேசி விட்டு போகட்டும்,பத்திரிகையில் செய்தி வரவேண்டும் என்பதற்காக பேசுகிறார் அதை நாங்கள் பொருட்படுத்தவில்லை,

தி.மு.க. திட்டங்களை ரிவிட் செய்துள்ளாரே தவிர புதிதாக ஒன்றையும் டெல்லியில் முதல்வர் சொல்லவில்லை,

**பேரிடர் நிதி என்று தனியாக கொடுக்கவில்லை**

மத்திய அரசு நிதி அளிக்கட்டும் அப்புறம் பார்க்கலாம்,இயற்கை பேரிடர் நிதி என்று ஆண்டுதோறும் ஒரு நிதி கொடுப்பார்கள் அதைத்தான் கொடுத்துள்ள தவிர, தனியாக எதையும் அவர்கள் கொடுக்கவில்லை,

செங்கோட்டையனுக்கு அதுதான் தெரியும் அதைத்தான் சொல்லி இருக்கிறார். வேறு ஒன்றும் புதிதாக சொல்வதற்கெல்லாம் அவருக்கு தெரியாது,

ஆயிரம் கோடி வந்துள்ளது என்று செங்கோட்டையினிடம் சொன்னதும், தான் துறைக்கு அமைச்சராக வந்தது பணம் வந்துள்ளது என்ற பெருமையில் அவர் சொல்லியுள்ளார்.

ஆனால் அதிகாரிகளிடம் கேட்டுப் பார்த்தால் அந்த உண்மை தெரியும்,

அவர்கள் மத்திய அரசிடம் இணக்கமாக செயல்பட்டால் என்ன? எப்படி செயல் பட்டால் என்ன,

தமிழகத்திற்கு கிடைக்க வேண்டியது கிடைத்தால் சரி. நாங்கள் கேட்ட கல்வி நிதியைத்தானே இப்போது தமிழக முதல்வர் டெல்லியில் கேட்டு உள்ளார்.

நாங்கள் முன்மொழி கல்விக்கு எதிராக போராடினோம். அதனால் அன்று அந்த நிதி நிறுத்தப்பட்டது.

நிறுத்தப்பட்ட அந்த 3000 கோடியை தான் இன்றைக்கு உள்ள ப்ரோ முதல்வர் கேட்டுள்ளார்.

10 லட்சம் கோடி ரூபாய் கடன் உள்ளது என்று அருமையான வெள்ளை அறிக்கையை கடந்த பிப்ரவரி மாதம் எங்களது நிதிநிலை அறிக்கையில் நாங்கள் கொடுத்து விட்டோம். அதைப் படித்துப் பார்த்த பிறகு தமிழகத்தின் இது நிலைமை எப்படி உள்ளது என்பதை தெரிந்து கொள்ள தவறி விட்டார்கள் என்றால் அது அவர்களின் தவறு, அது எங்களின் தவறல்ல.இதற்கு தனியாக வெள்ளை அறிக்கை தர வேண்டிய அவசியம் இல்லை, பட்ஜெட்டை படித்தாலே சாதாரண மக்களுக்கும் புரியும்,

**விஜயின் ரீல்ஸ் ஆட்சி!**

தற்போது விஜயின் ரீல்ஸ் ஆட்சி தமிழகத்தில் நடந்து கொண்டுள்ளது,

மக்கள் மாயையில் ஒரு மோகத்தில் வாக்களித்து விட்டார்கள், எந்த வேட்பாளர் எந்த கட்சி அவர் பெயர் என்ன அவன் நல்லவனா கெட்டவனா அவன் பின்னணி என்ன அவன் எந்த ஊர் காரன் என்று கூட தெரியாமல் வாக்களித்து உள்ளார்கள் என்றால், இதைப் போல ஒரு தேர்தல் நடந்ததாக வரலாறே கிடையாது,

தேர்தல் கூத்து என்று சொல்வதைப் போல அரசியல் கூத்து தான் 2026 தேர்தல். ஆதவ் அர்ஜூனா மட்டுமல்ல ஜான் ஆரோக்கிய சாமி போல இன்னும் 4, ஐந்து பேர்கள் முதல்வரோடு செல்கிறார்கள், முதல்வரின் அலுவலகத்திற்கு பக்கத்திலேயே அவர்களுக்கும் அலுவலகம் கொடுக்கின்றனர்,

ஒருத்தர் முதலமைச்சர் அலுவலகத்திற்கு உள்ளேயே இருக்கிறார் இதுபோல கூத்தெல்லாம் இன்று தமிழகம் தான் பார்த்துக் கொண்டுள்ளது,

முதல்வருக்கு ஆதவ் அர்ஜூனாவா, ஆரோக்கிய சாமியா யார் தான் ஐடியா கொடுக்கிறார் என்பது தெரியவில்லை..

ஆனால் ஒன்று எதுவுமே நடக்காது அது நன்றாக தெரியும்.

ஒரு மாத காலத்தில் த.வெ.க. ஆட்சியின் செயல் பாட்டின் சதவீதம் பூஜ்ஜியம்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி அறித்தார்.

சென்னை கிழக்கு மாவட்டம், அம்பத்தூர் வடக்கு பகுதியில், முத்தமிழறிஞர் கலைஞர் 103 வது பிறந்தநாள்– புத்தெழுச்சி நாள் விழாவை முன்னிட்டு "புத்தெழுச்சி–16, "கலைஞரின் சொற்களே சமூக மருத்துவம்! காலத்தை வெல்லும் கழகத்தின் மகத்துவம்!! எனும் தலைப்பில், மாபெரும் மருத்துவ முகாம் நேற்று மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் டாக்டர் ஜி.சாந்தகுமாரி எம்.சி. தலைமையில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் நடைபெற்றது. மருத்துவ முகாமை முன்னாள் அமைச்சரும், சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளருமான மா.சுப்பிரமணியன் துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார். இம்மருத்துவ முகாமில் பகுதி செயலாளர்கள் ஜோசப் சாமுவேல், பி.கே.மூர்த்தி, எம்.சி,டி..எஸ்.பி ராஜகோபால் எம்.சி., எம்.டி.ஆர். நாகராஜ், டாக்டர் ஏ.பி. பூர்ணிமா.எம்.சி, மற்றும் கழக நிர்வாகிகள் செயல்வீரர்கள் முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. முன்னிலை! வி.சுதாகர் தலைமை!

# எழும்பூர் தெற்குப் பகுதியில் கலைஞர் புத்தெழுச்சி நாள்! - நல உதவிகள்!

## மாவட்டச் செயலாளர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி – திவ்யா சத்யராஜ் வழங்குகின்றனர்!

சென்னை, ஜூன். 15

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் எழும்பூர் தெற்கு பகுதியில் முத்தமிழறிஞர் கலைஞர் 103 வது பிறந்தநாள்- புத்தெழுச்சி நாள் விழாவை முன்னிட்டு "புத்தெழுச்சி-19 வேரை விழுதுகள் போற்றும்! முத்தமிழ் கொடியை ஏற்றும்!!எனும் தலைப்பில், மாபெரும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று (15.06.2026, திங்கட்கிழமை) காலை 11.00 மணியளவில், சென்னை, எழும்பூர் சிராஜ் ஹாலில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் எழும்பூர் தெற்கு பகுதி செயலாளர் வி. சுதாகர் தலைமை வகிக்கிறார்.

சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளர் பி.கே. சேகர்பாபு எம். எல்.ஏ,மேயர் பிரியா ராஜன், தயாநிதி மாறன், எம்பி சொ. வேலு.எம். சி, கோ.ஏகப்பன், கே எஸ் எம் நாதன், புனிதவதி எத்திராசன். எம் சி, ப.ஸ்ரீராமலு எம் சி,பரிதி இளம் சுருதி. எம்சி, ராஜேஸ்வரி ஸ்ரீதர் எம் சி,ஜி. தாமோதரன், அ.நிர்மலா தேவி, எல். சுந்தர்ராஜன் எம்சி, ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

டி.வி வேலு, எம். மணிமாறன், கே. அன்னபூரணி, எஸ். ஜெகதீசன், ஆர்.பாபு (எ) சந்திரசேகரன் எஸ். வி. விஜயகுமார், ஆர்.பாபு வான்மதி கதிரவன் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இம்மாபெரும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி, புத்தாடைகள் ,பள்ளி கல்லூரி மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை, உபகரணங்கள், திருநங்கைகளுக்கு நல உதவி,புத்தாடை வழங்கியும் மற்றும் இரத்த தானம் அளித்தவர்களுக்கும் சிறப்பு செய்தும் திருச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி மற்றும் கழக தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் திவ்யா சத்யராஜ் ஆகியோர் வாழ்த்து ரைக்கின்றார்கள்.

இதில், தமிழன் பிரசன்னா, கே.எஸ். ரவிச்சந்திரன், இ. பரந்தாமன்,ப.தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், அ.வெற்றி அழகன், கார்த்திக் மோகன், எஸ். மணிமுடி, வே.உமாகாந்த் ,பி எம் யாழினி,ப. ரங்கநாதன். பி கே மூர்த்தி கவிஞர் நன்மாறன் எம். விஜயகுமார், சங்கரி நாராயணன், என் பி எம் ஷேக் அப்துல்லா, ஆர்.வரதன் மாவட்ட கழக நிர்வாகிகள்: தேவ ஜவகர்,ஜி.மகாதேவன், புனிதவதி எத்திராசன் MC,இசட்.ஆசாத், மண்டல குழு தலைவர்கள்: கூ.பீ. ஜெயின் MC,சரிதா மகேஷ் குமார்,, பகுதி கழக செயலாளர்கள்: ஐசிஎப் வ. முரளிதரன்,எ.நாகராசன்,வே. வாசு , எஸ்.இராஜசேகர் எஸ். முரளி. டிஎஸ்பி ராஜகோபால், எம் டி ஆர் நாகராஜ், செ. தமிழ் வேந்தன் எம்.சாமி கண்ணு, பொதுக்குழு உறுப்பினர்கள்: கோ.மணி,எஸ்.பன்னீர் செல்வம், டி.வி.செம்மொழி, சாவித்திரிவீரராகவன்,எம் இப்ராஹிம் கனி, இரா கலைச் செல்வி, டாக்டர் ஏ.பி. பூர்ணிமா எம் சி ரமேஷ் (எ) நீல கண்டன் எம் சி. பி உதயசங்கர் பிஜே துளசிங்கம்,

மாவட்ட பிற அணிகளின் அமைப்பாளர்கள்: வானவில்வி ஜய், ஜெ.பாலமுருகன், எஸ். தனசேகர்,க.வினோத், ஜி. ஜெ.பிரபு, ஆர்.டி.சங்கர்நானா , சுதாதீனதயாளன் MC, நா.துலுக்காணம் எல் பி எஃப் மோகன், துரை கண்ணன், ஆர் எஸ் சித்திக், ம. அசோக்குமார், எம்.பெரோஸ்கான், கா.ராஜ் முகமது இரா.வீரமணி.து.ஆயிரம்,கு. கிருஷ்ணமூர்த்தி,பி. விஜயகுமார் பா.பிரதீப் குமார் எல். சம்பத்குமார், இரா வீர மணி, எம். பெரோஸ் கான், கா. ராஜ் முஹம்மது, நா துலுக் கானம் எம். விநாயகம் டாக்டர் ஜி சாந்தகுமாரி. எம் சி, ஜீ.வி. நாகவள்ளி. எம் சி மற்றும் கழக முன்னோடிகள் செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்ற னர்.

இறுதியில் வட்ட கழக செயலாளர்கள் எஸ். ரசூல் டால்பின் எஸ். அரிகிருஷ்ணன் நன்றி கூறுகிறார்கள்.

கலைஞரின் 103வது பிறந்தநாள்

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. கொண்டாடும்

புத்தெழுச்சி நாள் விழா

புத்தெழுச்சி - 19

வேரை விழுதுகள் போற்றும்!
முத்தமிழ் கொடியை ஏற்றும்!!

நாள் : 15.06.2026 திங்கட்கிழமை காலை 11.00 மணி
இடம் : சிராஜ் ஹால், எழும்பூர்.

தலைமை
வி. சுதாகர் பகுதி கழகச் செயலாளர்

புத்தெழுச்சி - 20

மகத்தான மாண்பாளர்!
வளர்ச்சியின் நெறியாளர்!!

நாள் : 15.06.2026 திங்கள் மாலை 6.00 மணி
இடம் : லட்சுமி மகால். பெரம்பூர் பேரக்ஸ் சாலை.

தலைமை
சொ.வேலு எம்.சி. பகுதி கழகச் செயலாளர்.

முன்னிலை
பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர்

சொ.வேலு எம்.சி, கோ.ஏகப்பன், கே.எஸ்.எம்.நாதன், ப.ஸ்ரீ ராமலு எம்.சி, புனிதவதி எத்திராஜன் எம்.சி, எஸ்.மணிமுழி, பரிதிஇளம்சுருதி எம்.சி., வே.உமாகாந்தன், ராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி, கோ.மணி, அ.நிர்மலா தேவி, ஜி.தாமோதரன், எல்.சுந்தர்ராஜன் எம்.சி, க.வினோத்

வி.சுதாகர், கோ.ஏகப்பன், கே.எஸ்.எம்.நாதன், புனிதவதி எத்திராஜன் எம்.சி, சரிதா மகேஷ் குமார் எம்.சி, எஸ்.மணிமுடி, பரிதிஇளம்சுருதி எம்.சி., வே.உமாகாந்தன், ராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி, கோ. மணி, அ.நிர்மலா தேவி, ஜி.தாமோதரன், எல்.சுந்தர்ராஜன் எம்.சி, க.வினோத்

கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி, புத்தாடைகள் , பள்ளி கல்லூரி மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை, உபகரணங்கள், திருநங்கைகளுக்கு நல உதவி, புத்தாடை வழங்கியும் மற்றும் இரத்த தானம் அளித்தவர்களுக்கு சிறப்பு செய்து வாழ்த்துரைப்பவர்கள்.

திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி
திருச்சி தெற்கு மாவட்ட செயலாளர்

செல்வி. திவ்யா சத்யராஜ்
கழக தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர்

முத்தமிழறிஞர் கலைஞரை போற்றும் கவியரங்கத் தலைமை
பேராசிரியர் அப்துல்காதர்

கவியுரைப்போர்
கவிஞர் நெல்லை ஜெயந்தா
கவிஞர் கங்கை மணிமாறன்
கவிஞர் தஞ்சை இனியன்
கவிஞர் ஆண்டாள் பிரியதர்ஷினி
கவிஞர் தனிக்கொடி
கவிஞர் சிநேக பார்த்திபராஜா

மேயர் பிரியா ராஜன், தயாநிதி மாறன் எம்.பி,
இ.பரந்தாமன். கே.எஸ்.ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, பி.எம்.யாழினி

நன்றியுரை
எஸ்.ரசூல், டால்ஃபின் எஸ்.அரிகிருஷ்ணன்
வட்ட கழக செயலாளர்கள்.
அன்புடன்
61, 61அ வட்ட திமுக, எழும்பூர் தெற்குப்பகுதி

நன்றியுரை
கூ. மனோகரன், ந.பாலு
வட்டக் கழக செயலாளர்கள்
அன்புடன்
78, 78அ வட்ட திமுக, எழும்பூர் வடக்கு பகுதி.

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.